உ

சிவமயம்

நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்து இவ்வுலகு. -திருக்குறள்



அமரர்

# திருமதி. சி. பார்வதிப்பிள்ளை

அவர்களின்

## முதலாம் ஆண்டு

# நினைவு மலர்

31-10-1997

அமரர்

# திருமதி. சி. பார்வதிப்பிள்ளை



தோற்றம்
23-7-1917

மறைவு
10-11-1996

**திதி வெண்பா**

தாது வருடத்தைப்பசித் திங்கள்
தேதி இருபத்தைந்தில் – மாதினியாள்
பார்வதிப்பிள்ளை அமாவாசைத் திதியில்
சேர்ந்தனள் சிதம்பரன் தாள்.

## அமரரின் துணைவர்

அமரர்

# திரு. சிற்றம்பலம் சிதம்பரப்பிள்ளை



தோற்றம்
21-6-1900

மறைவு
17-6-1965

### திதி வெண்பா

ஆண்டுவிசு வாவசுவாம் ஆனிபதி னேழுபுதன்
பூண்டதிரு தியையாம் புகலபரம் ~ ஆண்டகையாம்
அண்ணல் சிதம்பரப்பிள்ளை அவனிதனையே விடுத்து
விண்ணு லகு மேவினான் விழைந்து.



# இதயஞ்சலி

எமது அன்புத் தெய்வத்தின்

**நினைவு மலரை**

அவர்களின் பாதமலர்களில்சூட்டி

பாசத்துடன் வணங்குகின்றோம்.



மகள் : நாகபூஷணி அம்மை தியாகராசா

பேர்த்தி : யசோதை சிறீதரன்

பேரன் : சிறீதரன் பொன்னுச்சாமி

உ
சிவமயம்

அமரர்

# பார்வதிப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை

அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

இந்து சமுத்திரத்தின் முத்தெனத்திகழும் இலங்கை மாநகரின் வடபால் அமைந்த யாழ்ப்பாணத் தீபகற்பகத்திலே, கடல் வளமும், நிலவளமும் நிறைந்ததும், தொல்பெரும் தான்தோன்றி வரதன் புலோ சித்திவிநாயகரதும், முத்துக்குமாரசுவாமியினதும் ஆலயங்கள் தனித்தனியே இணைந்து மிளிரும் மூளாயம் பதியினில் இருமரபிநும் துய்ய மாணாமுதலி வம்சத்தில் தோன்றிய அப்பாப்பிள்ளை செல்லாச்சி அம்மை தம்பதிகளுக்கு அமரர் பார்வதிப்பிள்ளை மூத்த புதல்வியாய் 23-7-1917 ம் ஆண்டில் பிறந்தார். தங்கமுத்து, இரத்தினம் ஆகியோர் இவருடைய சகோதரிகளாவர். அமரரது தந்தையார் மலேசியாவில் பணிபுரிந்தமையால் அவர் தனது பெரிய தந்தையார் விசுவநாதபிள்ளை குடும்பத்தவரின் அரவணைப்பில் வளர்ந்தார். பெரிய தந்தையாரின் பிள்ளைகள் முருகேசப்பிள்ளை, கந்தையா இவரது உடன் பிறவாச் சகோதரர்களாயினர். அவர்களை மூத்தண்ணை, சின்னண்ணை என அன்புடன் அழைப்பாராயினர். மூத்தம்மான் என அமரரால் அன்பாக அழைக்கப்பட்ட தந்தை வழி மாமனார் அமரர் சோதிடர் திரு. அம்பலவாணபிள்ளை அவர்கள் தன் கைப்பட்ட சாதகம் ஒன்றை எழுதி மகேஸ்வரி எனப் பெயரிட்டு, அப்பெயராலேயே குடும்பத்தினர். அனைவரும் அழைத்து வந்தனர். உறவினர்கள் அனைவருக்கும் அமரர் ஒரு அருந்தவச் செல்வியாக விளங்கினார்.

அமரர் தமது கல்வியை மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலையில் கற்றார். தமது பன்னிரண்டாவது வயதில் தீட்சை பெற்றார் எதிர்பாராத விதமாக 1931ம் ஆண்டு அமரரின் தந்தையார் மலேசியாவில் சிவபதம் அடைந்தார். அதே ஆண்டில் அவரது பதினான்காவது வயதில், தெற்கு அராலி இருமரபேந்திய முதலிவம்சத்தில் தோன்றியவரும், மலேசியாவில் உதவி வைத்திய கலாநிதியாக அரசசேவையில் பணிபுரிந்த அமரர் ஸ்ரீமான் சிற்றம்பலம் சிதம்பரப்பிள்ளையைத் திருமணம் புரிந்து மலேசியா சென்றார்.

அன்பு, பண்பு, இரக்கம், கருணை, கடமை, நேர்மை, விருந்தோம்பல், சமயாசாரம், தெய்வீக வழிபாடு ஆகிய நற்குணங்கள் ஒருங்கே அமையப்பெற்ற ஓர் குணக்குன்றாக அமரர் விளங்கினார். வேண்டியவர்களுக்கு வேண்டியாங்கு உதவுவதிலும் நிகரற்று விளங்கினார். எக்கருமத்தையும் தீர்க்கமாகச் சிந்தித்து செயலாற்றும் திறமை வாய்ந்தவர்.

"மனைத்தக்க மாண்புடையள் ஆகித் தற்கொண்டான்
வளத்தக்கான் வாழ்க்கைத் துணை"

என்னும் வள்ளுவப் பெருமான் வாக்கிற்கமையவும் "கற்பெனப்படுவது சொல்திறம்பாமை" என்னும் ஔவைப்பாட்டியின் முதுமொழிக்கிணங்கவும், சிவமும், சக்தியும் போல கருத்தொருமித்த இல்லறத்தை இனிதே நடாத்தினார். இவர்களுக்கு நயினை அம்பாள் திருவருளால் நாகபூஷணி அம்மை என்னும் புத்திரி பிறந்தார்.

"கேடில் விழுச் செல்வம் கல்வி" என்பதில் அசையாத நம்பிக்கை கொண்ட அவரது வாழ்க்கைத் துணைவர் தம் தர்மபத்தினிக்கு சங்கீதம், தையல்கலை ஆகியவற்றில் தக்க ஆசிரியர்களைக் கொண்டு போதிப்பித்தார். 1917ம் ஆண்டு அகில இலங்கையிலே நடாத்தப்பட்ட சமயப் பாடப்போட்டியில் அமரரது வாழ்க்கைத் துணைவர் தங்கப் பதக்கம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. இதுவே அமரரின் சமய அறிவு வளர்ச்சிக்கு வழிகோலியது.

அமரர் தமது ஏகபுத்திரி ஒரு பொருளாதாரப் பட்டதாரியாக வந்தமை குறித்து மனம் மகிழ்ந்தார். அவரைத் தமது சொந்தமருமகன் அமரர் செல்லத்துரை தியாகராசா, உதவிவைத்திய கலாநிதிக்கு 1961ம் ஆண்டு திருமணம் புரிவித்தார். இவர்களுக்கு பாம்பணையில் பள்ளிகொள்ளும் பரந்தாமன் கூர்ம அவதாரம் எடுத்து கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் பொன்னாலை வரதராஜப்பெருமான் திருவருளால் ஏக புத்திரியாக செல்வி யசோதை பிறந்தார். 1965ம் ஆண்டு அமரரின் கணவர் இறைவனடி சேர்ந்தார். இதனால் ஆழ்ந்த துயரம் அடைந்தார். தனது பேர்த்தியின் மழலை மொழிகளிலும் அவரை வளர்ப்பதிலும் தனது கவலையை ஆற்றி குடும்பத்திற்கு ஒரு உறுதுணையாகவும், ஒளிவிளக்காகவும் திகழ்ந்தார்.

தன் அன்பிற்குரிய பேர்த்தி ஒரு பொருளாதாரப் பட்டதாரியாக வந்தமை அமரருக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது. அதே வேளை தனது

அருமை மருமகன் அமரர் தியாகராசா 1987ல் இறைவனடி சேர்ந்தமை துன்பத்தை அளித்தது. மிக்க ஆவலுடன் அமரர் எதிர்பார்த்த தனது பேர்த்தி திருநிறைச்செல்வி யசோதைக்கும் பன்றித்தளர்ச்சி அம்மன் பதிகொண்ட நன்னூரில், தொல்மரபு சான்றோர் வழிவந்த காலஞ்சென்ற ஸ்ரீமான் பொன்னுச்சாமி (தபால் அதிபர்,சாவகச்சேரி) மங்கையற்கரசி தம்பதிகளின் ஏக புத்திரன் திருநிறைச்செல்வன் சிறீதரனுக்கும் (கணனி நிகழ்ச்சி தொகுப்பு ஆய்வாளர் கனடா) 1995ம் ஆண்டு திருமணம் இனிதே நிறைவேறியது. இதனால் அமரர் அடைந்த இன்பம் சொல்லும் தரமன்று.

மூளாய் சித்திவிநாயகப் பெருமானுக்கும், முத்துக்குமாரசுவாமிக்கும், முதலாம் திருவெம்பா பூசைகள் செய்வித்து மகிழ்ந்தார். வாழ்க்கையின் நிலையாமை பற்றி நன்கு உணாந்திருந்தார். "காதற்ற ஊசியும் வாராது காண் கடைவழிக்கே" என்ற பட்டினத்தடிகளின் கூற்றை அடிக்கடி கூறுவார். மற்றவர்களுக்கு எவ்வித தொந்தரவும் கொடுக்காது, தாமே இயன்றவரை சகல காரியங்களையும் செய்த அன்னார், தீபாவளித்தினத்தன்று சித்தி விநாயகர் ஆலய மணி மாலைப்பூசைக்கு ஒலிக்க, 1996ம் ஆண்டு ஐப்பசித் திங்கள் 10ம் திகதி இறைவனுடன் சங்கமமானார்.

'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்.'

அமரத்துவம் அடைந்த அன்னாரின் ஆத்மா சாந்திஅடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!



# பஞ்சபுராணம்

## தேவாரம்

வேதமோதி வெண்ணூல் பூண்டு வெள்ளை எருதேறிப்
பூதம் சூழப் பொலிய வருவார் புலியின் உரிதோலார்
நாதா எனவும் நக்கா எனவும் நம்பா என நின்று
பாதம் தொழுவார் பாவம் தீர்ப்பார் பழன நகராரே.

## திருவாசகம்

அன்றே யென்றன் ஆவியும்
உடலும் உடைமை யெல்லாமும்
குன்றே யனையாய் எனையாட்
கொண்ட போதே கொண்டிலையோ
இன்னோ ரிடையூறெனக் குண்டோ
எண்டோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே.

## திருவிசைப்பா

ஏக நாயகனை இமயவர்க் கரசை
என்னுயிர்க் கமுதினை எதிரில்
போக நாயகனைப் புயல்வணற் கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையால் ஊர்ந்த
மேக நாயகனை மிகுதிருவீழி மிழலை
விண்ணழி செழுங்கோயில்
யோக நாயகனை அன்றிமற் றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே.

## திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப்பொருள்
சோதித்த தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிறையும் சில தேவர்
சிறு நெறிசேராமே
வில்லாண்ட கனகத் திரண்மேரு
விடங்கன் விடைப் பாகன்
பல்லாண்டென்னும் பதம் கடந்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

ஐந்து பேர் அறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணம் ஒரு மூன்றும்
திருந்து சாத்துவிகமே ஆக
இந்து வாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெரும் சத்தின்
வந்தபேர் இன்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.

## திருப்புகழ்

இசைந்த ஏறும் கரியுரி போர்வையும் - எழில்நீறும்
இலங்குநூலும் புலியதளாடையும் - மழுமானும்
அசைந்த தோடும் சிரமணி மாலையும் - முடிமீதே
அணிந்த ஈசன்பரிவுடன் மேவிய - குருநாதா
உசந்த சூரன் கிளையுடன் வேரற - முனிவோனே
உகந்த பாசக் கயிறொடு தூதுவர் - நலியாதே
அசந்த போதென் துயர்கெட மாமயில் - வரவேணும்
அமைந்த வேலும் புயமிசை மேவிய - பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க, மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க, குறைவிலா துயிர்கள் வாழ்க,
நான்மறை யறங்கள் ஓங்க, நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

# கண்ணீர் அஞ்சலி - மகள் இரங்கலுரை
## அன்னை ஓர் ஆலயம்

என் அருமைத் தெய்வமே! நான் வணங்கும் தெய்வங்களில் எல்லாம், பேசும் தெய்வம் நீரே அன்றோ! அன்புக்கு அர்த்தம் சொல்பவள் நீர் தானே! தாயின் பாதங்களில் தான் சுவர்க்கம் உண்டு. 10-11-96ல் எதிர்பாராத உமது பிரிவுச் செய்தி கிடைத்ததே. அந்தோ! என் மனதில் இடி விழுந்ததே. நூற்றுக்கணக்கான மைல்களுக்கு அப்பால் இருந்து செய்வதறியாது துடிதுடித்தேன். நாட்டு நிலைமையால் உம்மிடம் வரும் வாய்ப்பு கிட்டவில்லை.

அன்பின் திருவுருவே! பாசத்தின் உறைவிடமே! அன்பு நெஞ்சமே! என்னை மறந்து எப்படி மீளாத்துயிலை ஏற்றீர்கள்? அன்பாய் ஆதரித்த என்னை விட்டு பரமனடி சேரும் எண்ணம் எப்படி வந்தது? பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்து, சீராட்டி, தாலாட்டி, வளர்த்தெடுத்த பத்தினித் தெய்வமே! கல்வி புகட்டி மனிதனாக்கினீர்களே! அறுசுவை உணவுகள் தருவீர்களே! நான் கவலைகளால் வருந்தியபோது, ஆறுதல் வார்த்தைகள் சொல்வீர்களே! அறிவுரைகள் பகர்வீர்களே! செய்ய வேண்டிய கருமங்கள் அனைத்தையும் வீட்டில் இருந்தே சொல்லி வழிகாட்டுவீர்களே! உம்மிடம் வேலைக்கு நீர் அழைப்பவர்களை, வந்தவுடன் வேலை கொடுக்காது முதலில் என்ன சாப்பிட்டாய்? தண்ணீர் குடி என்று அன்புடனும் பரிவுடனும் கேட்பீர்களே! இப்போது அவர்கள் எல்லோரும் உமது மறைவால் துன்பப்படுகிறார்களே! நீர் மறைந்தாலும் எனக்கு நீர் இருப்பது போல் மனக்கண் முன் தெரிகிறதே. வினைப் பயன் தீர்க்கும் விநாயகன் அருளால் உலகினை விடுத்து, உடலினை வெறுத்து இறைவன் தாள் சேர்ந்து விட்டீரோ? இனி எப்போது உம்மைக் காண்பேன்?

நான் இறுதியாக உம்மைப் பார்த்தது 1995ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18ம் திகதி, வைத்திய சிகிச்சைக்காகவும், மகளின் திருமணவிடயமாகவும் கொழும்பு புறப்பட்ட பொழுது, நீர் "நான் பிறந்து வளர்ந்த வீட்டில் மூத்தண்ணையின் பிள்ளைகளுடன் சநதோஷமாக இருப்பேன். என்னைப் பார்க்கவென்று ஓடி வர வேண்டாம்" என்று இருகரம் கூப்பி வாசலில் விடை தந்தீர். அதுவே உமது இறுதி விடை என்பதை யான் உணரவில்லை. நீர் நோய்வாய்ப்பட்டிருந்த பொழுது உம்மைக் கண்ணும் கருத்துமாக அல்லும்

பகலும் நித்திரை விழித்து கவனித்த மருமக்கள் சிவபாக்கியம் (கமலா), விமலாதேவி, பெறாமகன் பேரின்பநாயகம், பேரப்பிள்ளைகள் அருளீசன், லோகதாரணி ஆகியோர் அருகில் இருக்க உமது விண்ணு லக யாத்திரையை மேற்கொண்டீரோ? உமது விருப்பப்படியே நும் கணவர்வழி பெறா மகன் பேரின்பநாயகம் ஈமக்கிரியைகளை நிறைவேற்றினார். அவர்கள் அனைவருக்கும் எனது மனப்பூர்வமான நன்றி என்றும் உரியது.

உமது ஆத்ம சாந்திக்கு என்றும் பிரார்த்தித்துக்கொண்டிருப்பேன்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

---

## பேர்த்தி - இரங்கல் உரை

என் அருமை ஆச்சி! உமது மறைவு எனக்கு அளவற்ற துயரம். என்னை பிறந்த நாள் தொடக்கம் அன்புடன் வளர்த்த தெய்வமே. கொஞ்சிக் கொஞ்சிப் பேசி சோறூட்டி குட்டிக்கதைகள் சொல்வீரே! கதையோடு பாடல்களை இணைத்து கூறுவீரே! எனது வயது வளர்ச்சிக்கு ஏற்ற நீதி நூல்களான ஆத்திசூடி, கொன்றைவேந்தன், உலகநீதி ஆகிய நூல்களை விளக்குவீரே. இவைகளே எனது வாழ்க்கைக்கு வழிகாட்டியாய் அமைந்தனவே! ஆச்சி! நீர் எனக்கு ஆரம்பத்தில் எழுதப்படிக்கக் கற்றுத் தந்தீரே! எனது திருமணத்தினால் மனம் பூரித்து எனக்கும் துணைவருக்கும் எத்தனை! எத்தனை! அன்பான கடிதங்களை எழுதினீர்கள்? நீர் என்பால் காட்டிய மாறாத அன்பும், மிகுந்த அக்கறையும் விலைமதிப்பற்றவை. உமது ஆசைகள் நிறைவேறி விட்டதென்றோ இறைவனுடன் சிவ சங்கமமானீர். உமது ஆத்மா சாந்தியடைய என்றென்றும் பிரார்த்திக்கின்றேன்.

---

## இனிய முகம் காண்பதெப்போ?

அகதியென்று பெயர்சூட்டி வந்தநேரம்
அன்புக்காய் ஏங்கிநின்ற அந்த நேரம்
மகள் போலப் பாவித்தே அன்பு செய்தீர்!
மாயமாய் மறைந்தீரோ என்று சொல்வீர்!
முகமலர்ந்து சிரிக்கின்ற சிரிப்பு எங்கே?
முத்தான அன்புள்ளம் எங்கே? எங்கே?
இக வாழ்வில் இன்பமில்லை என்றோ ஆச்சி
இறைவனடி சேர்ந்தீரோ சொல்லும் ஆச்சி!

'பிறப்புளதேல் இறப்புமுண்டு' என்ற உண்மை
பேசரிய விதியென்பர்உண்மை ஆனால்
சிறப்பரிய உதவிசெய்யப் பார்த்து நின்றேன்
சொல்லாமல் போய்ச் சேர்ந்து விட்டீர் ஆச்சி!
மறப்பறியா வேதனையில் கலங்குகின்றேன்
மார்க்கம் தான் தெரியவில்லை என்ன செய்வேன்?
அறக்கடவுள் அருளுண்டு என்றோ நீர்தான்
ஆண்டவனார் பாதம்சேர்ந் தீரோ ஆச்சி!

விதம் விதமாய் தின்பண்டம் தந்தீர் என்றும்
விருப்புடனே கதைகளும் பேசி நின்றீர்
பதம் பதமாய் பழமொழிகள் பலவும் சொன்னீர்
பரிதவிக்குதே வேதனையில் எந்தன் உள்ளம்
இதமான உபசரிப்பு இன்று இல்லை
இத்தனையும் எண்ணு கின்றேன் ஏங்குகின்றேன்
சதமெனவே பற்றுக்கள் பறக்க விட்டு
சார்ந்தீரோ சிவன் பாதம் சொல்லும் ஆச்சி!

**அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.**
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

செல்வி யோகலட்சுமி சோமசுந்தரம்
கலைப்பட்டதாரி, டிப்புளோமா
பண்டிதர், காரைநகர்

# இதயத்திலிருந்து............

மூளாய்க் கிராமத்தில் சீரும் சிறப்பும், பேரும் புகழும் பெரும் பண்பும் நிறைந்து காணப்படுவது திருவாளர் சிதம்பரப்பிள்ளை அவர்களுடைய குடும்பமும் சுற்றமும் ஆகும். "இல்லாள் அகத்திருக்க இல்லாததொன்றில்லை" என்ற வாக்கிற்கமைய, இக் குடும்பத்தின் பெருமையைப் பேணிக்காத்தவர் அமரர் திருமதி. பார்வதிப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை ஆவர். இவர்தம் வாழ்வில் தான தருமங்கள், ஆலயவழிபாடு, சீரியவாழ்க்கை ஆகியவற்றைக் கடைப்பிடித்து, வாழ்ந்து இறையடி பெற்ற பெருந்தகை.

அமரரது மகளுடன் காரைநகர் இந்துக்கல்லூரியில் ஆசிரியராகக் கடமைபுரியும் வாய்ப்பு எனக்குக் கிடைத்த காலம் முதல் இவர்களது அன்பான அரவணைப்பில் பண்புகள் பலவற்றைப் படிக்கும் வாய்ப்புக்களைப் பெற்றேன். எனது பெரிய தந்தையார் பொன்னாலை வரகவி திரு. பே. சு. கிருஷ்ணப்பிள்ளையின் உற்ற நண்பர் திரு. சிதம்பரப்பிள்ளை அவர்கள். இவர்களது நட்பும், தொடர்பும் என்னை அவர்கள் கௌரவித்தமைக்கான காரணம் எனக் கருதுகிறேன். இவர்களது நீடித்த தொடர்பினால், செல்வி யசோதை என்னிடம் சில காலம் இசையைக் கற்கலானார். எனது இசையில் அன்னாருக்கு அளவற்ற பற்று அமரருக்கு ஆரம்ப இசை அறிவு இருந்தமையால், அவரது பேர்த்தி, வீட்டில் இசைப்பயிற்சி செய்யும் போது, சரிபிழைகளைக் கூறும் ஆற்றல் பெற்றவராகவும் இருந்தார். நான் எனது மாணவிக்கு கற்பிக்கும்போது அருகில் இருந்து சங்கீதத்தை ரசிப்பார்.

முழுமையான வாழ்வும், வளமும் பெற்றுவாழ்ந்த அம்மையார் என்மீது அளவற்ற பற்றும் பாசமும் உடையவராய் இருந்த தன்மையை என்னால் மறக்கவே முடியாதிருக்கிறது. இவரது மறைவு என்னை வருத்தியது. எனினும் இறப்பு இயல்பானதே எனத் தேற்றம் கொண்டேன். அன்னாரது ஆன்மா என்றும் நித்தியானந்தம் பெற்று சாந்தி அடைய நாம் எல்லோரும் இறைவனை இறைஞ்சுவோமாக.

சங்கீதபூஷணம் திரு. சு, கணபதிப்பிள்ளை
பிரதிக்கல்விப் பணிப்பாளர்
யாழ்ப்பாணம்

இராகம் : சாவேரி தாளம் : மிஸ்ரசாமி

இயற்றியவர்

**வித்துவான் மு. அருணாசலம்பிள்ளை**

பேராசிரியர், தமிழ்த்துறை அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

**பல்லவி**

தாயை மறவாதே நெஞ்சே

**அனுபல்லவி**

ஓயாமல் ஓராண்டு ஒருங்கே சுமந்து பெற்று
காயாமல் நனையாமல் காத்து வளர்த்த தெய்வம்

**சரணம்**

கோயில் தெய்வம் பேசாது, குதலைமொழி கேளாது
நோய்மருந்து தாராது நோன்பு கொள்ளாது
சேயென்றால் இரங்காது, செம்மை நெறி சொல்லாது
ஆயுங்கால் இவையெல்லாம் அன்னையிடம் கண்டோமே.

பாடியவர்

சங்கீதபூஷணம் திரு. சு. கணபதிப்பிள்ளை
பொன்னாலை கோயிலடி.

## பட்டினத்து அடிகள்

### தன்தாயாருக்கு தகனக்கிரியை செய்கையில் அருளியது

ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் நொந்து பெற்றுப்
பையலென்றபோதே பரிந்தெடுத்துச் – செய்ய இரு
கைப்புறத்தில் ஏந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பில் காண்பேன் இனி?

முந்தித் தவம் கிடந்து முந்நூறு நாள் சுமந்தே
அந்திப் பகலாய்ச் சிவனை ஆதரித்துத் – தொந்தி
சரியச் சுமந்துபெற்ற தாயார் தமக்கோ
எரிய தழல் மூட்டுவேன்?

வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும் தோள்மேலும்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து – முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டும் தாய்க்கோ
விறகிலிட்டுத் தீமூட்டுவேன்?

நொந்து சுமந்து பெற்று நோவாமல் ஏந்திமுலை
தந்து வளர்த்தெடுத்துத் தாழாமே – அந்தி பகல்
கையிலே கொண்டென்னைக் காப்பாற்றும் தாய் தனக்கோ
மெய்யிலே தீ மூட்டுவேன்?

அரிசியோ நான்இடுவேன், ஆத்தாள் தனக்கு?
வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல் – 'உருசியுள்ள
தேனே, அமிர்தமே செல்வத் திரவியப்பூ
மானே' என அழைத்த வாய்க்கு?

அள்ளி இடுவது அரிசியோ? தாய் தலைமேல்
கொள்ளிதனை வைப்பேனோ கூசாமல்? – மெள்ள
முகம்மேல் முகம் வைத்து முத்தாடி 'என்றன்
மகனே' என அழைத்த வாய்க்கு.

முன்னை இட்ட தீ முப்புரத்திலே;
பின்னை இட்ட தீ தென்இலங்கையில்;
அன்னை இட்ட தீ அடிவயிற்றிலே
யானும் இட்ட தீ மூள்க! மூள்கவே!

வேகுதே தீயதனில் வெந்து பொடி சாம்பல்
ஆகுமே பாவியேன் ஐயகோ! – மாகக்
குருவி பறவாமல் கோதாட்டி என்னைக்
கருதி வளர்த்தெடுத்த கை.

வெந்தாளோ சோணகிரி வித்தகா! நின்பதத்தில்
வந்தாளோ! என்னை மறந்தாளோ – சந்ததமும்
உன்னையே நோக்கி உகந்துவரம் கிடந்து என்
தனையே ஈன்றெடுத்த தாய்?

வீற்றிருந்தாள் அன்னை; வீதிதனில் இருந்தாள்!
நேற்றிருந்தாள்; இன்றுவெந்து நீறினாள் – பால்தெளிக்க
எல்லீரும் வாருங்கள்! ஏதென்று இரங்காமல்
எல்லாம் சிவமயமே யாம்!

---

**அமரர் விரும்பிப் படிக்கும்**
**பட்டினத்துப் பிள்ளையார் பாடல்கள்.**

பிறக்கும் பொழுது கொடுவந்ததில்லை பிறந்து மண்மேல்
இறக்கும் பொழுதுகொடுபோவதில்லை, இடைநடுவில்
குறிக்கும் இச்செல்வம் சிவன் தந்த தென்று கொடுக்கறியா
திறக்குங்குலாமருக்கென் சொல்லுவேன் கச்சிஏகம்பனே

ஊருஞ் சதமல்ல உற்றார் சதமல்லவுற்றுப் பெற்ற
பேருஞ் சதமல்ல பெண்டீர் சதமல்ல பிளைகளுஞ்
சீருஞ்சதமல்ல செல்வஞ் சதமல்ல தேசத்திலே
யாருஞ் சதமல்ல நின்றாள் சதங்கச்சி ஏகம்பனே

கட்டியணைத்திடும் பெண்டீரும் மக்களுங் காலத்தச்சன்
வெட்டிமுறிக்கும் மரம் போற் சீரத்தை வீழ்த்தி விட்டாற்
கொட்டி முழக்கி அழுவார் மயானங் குறுகியப்பா
வெட்டி அடிவைப்பரோ இறைவாகச்சி ஏகம்பனே.

அன்னை எத்தனை எத்தனை அன்னையோ
அப்பன் எத்தனை எத்தனை அப்பனோ
பின்னை எத்தனை எத்தனை பெண்டிரோ
பிள்ளை எத்தனை எத்தனை பிள்ளையோ
முன்னை எத்தனை எத்தனை சென்மமோ
மூடனாய் அடியேனும் அறிந்திலேன்
இன்னம் எத்தனை எத்தனை சென்மமோ
என்செய்வேன் கச்சி ஏகம்பனே.

முடிசார்ந்த மன்னரு மற்றுமுள்ளோரும் முடிவிலொரு
பிடிசாம்பராய் வெந்து மண்ணாவதுங் கண்டு பின்னுமிந்தப்
படிசார்ந்த வாழ்வை நினைப்பதல்லால் பொன்னினம்பலவர்
அடிசார்ந்து நாமுய்ய வேண்டுமென்றே அறிவாரில்லையே.

## மனித தர்மம்

| | |
|---|---|
| ஏழ்மையிலும் | நேர்மை |
| கோபத்திலும் | பொறுமை |
| தோல்வியிலும் | விடாமுயற்சி |
| தரித்திரத்திலும் | பரோபகாரம் |
| துன்பத்திலும் | தைரியம் |
| செல்வத்திலும் | எளிமை |
| பதவியிலும் | பணிவு |

## தேற்றம்

நிலமிசை வாழ்வு நீரில் குமிழி நிகழ்த்த தென்றே
உலகோர் உரைக்கும் உண்மையை உன்னி உவகையுடன்
இலங்கும் இறைவன் பாதங்கள் போற்றி இன்பமிகும்
நலங்கள் தம்மை நாடினை நீ நல்லோர் ஏத்தும் நன்மணியே.

## நன்றி நவிலல்

எங்கள் குடும்ப விளக்கு நோயுற்ற சமயம் சீரற்ற நாட்டு நிலைமையிலும், இல்லம் வந்து சிகிச்சை அளித்த வைத்தியகலாநிதி சிங்காரியரத்தினம் அவர்கட்கும், பின்னர் மறைவின்று வருகை தந்தும், ஆறுதல் அளித்தும், பல உதவிகளைச் செய்த உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எங்கள் இதயம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

| | |
|---|---|
| ஐயனார் வீதி | மகள் : நாகபூஷணிஅம்மை தியாகராசா |
| மூளாய் | பேர்த்தி : யசோதை சிறீதரன் |
| 31-10-1997 | பேரன் : சிறீதரன் பொன்னுச்சாமி |

## மரபு வழி

இருமரபேந்திய
முதலிவம்சம்

கதிர்காமர்

முத்துக்குமாரு

சின்னத்தம்பி
+
வள்ளியம்மை

இருமரபினும் துய்ய
மாணா முதலிவம்சம்

முருகேசர்

சின்னத்தம்பி
+
சின்னாச்சிப்பிள்ளை

1 விசுவநாதர்
+
முத்தாச்சி

1. முருகேசபிள்ளை
+
வேதநாயகி

1. சிவபாக்கியம்
(கமலா)
+
அருமைநாயகம
—விமலாதேவி
3 சிவபாலன்
+
ரஞ்சினி

1. சுகிர்தன் 2. திரிபுரா 3. மாதுரி

2. கந்தையா
+
மகேஸ்வரி

1. கமலாம்பிகை
2. பத்மராணி
3. ஜெயராணி
4. ஞானம்பிகை
5. இந்திராணி

2 பொன்னாச்சி
+
அப்பாப்பிள்ளை

1. குலவீரசிங்கம்
+
இராசம்மா

1. மகேஸ்வரி
2. இராசரத்தினம்
3. விஜயரத்தினம்

3 அப்பாப்பிள்ளை
+
செல்லாச்சி

பார்வதிப்பிள்ளை
+

1. செல்லம்
+
சண்முகம்

2. தங்கமு
+
சம்மந்தப்பி

சிதம்பரநடர
+
சிவனேஸ்வ

1. பரமேஸ்வரி
2. நாகரத்தினம்மா
3. சண்முகம்
4. பேரின்பநாயகம் +
5. ஓங்காரவடிவேல்

1. அருளீசன்
2. லோகதாரணி

பெறாமகன்

— பார்வதிப்பிள்ளை

நாகபூஷணி அம்மை

ய

1. தியாகராசா 2. கணப

## மரபு வழி

இருமரபினும் துய்ய
மாணா முதலிவம்சம்

முருகேசர்

சின்னத்தம்பி
+
சின்னாச்சிப்பிள்ளை

2 பொன்னாச்சி
+
அப்பாப்பிள்ளை

1. குலவீரசிங்கம்
+
இராசம்மா

1. மகேஸ்வரி
2. இராசரத்தினம்
3. விஜயரத்தினம்

3 அப்பாப்பிள்ளை
+
செல்லாச்சி

இருமரபேந்திய
முதலிவம்சம்

சிதம்பரப்பிள்ளை

சிற்றம்பலம்
+
பார்வதியார்

1. செல்லம்மா
+
சண்முகம்

2. சிதம்பரப்பிள்ளை
+

3. நல்லம்மா
+
செல்லத்துரை

4. ஆச்சிப்பிள்ளை
+
சரவணமுத்து

**பார்வதிப்பிள்ளை**
+

2. தங்கமுத்து
+
சம்மந்தப்பிள்ளை

சிதம்பரநடராசா
+
சிவனேஸ்வரி

3. இரத்தினம்
+
தம்பையா

1. தேவராசா
2. சந்திராதேவி
3. சர்வானந்தா

**பார்வதிப்பிள்ளை + சிதம்பரப்பிள்ளை**

**பெறாமகன்** → நாகபூஷணி அம்மை + தியாகராசா

யசோதை + சிறீதரன்

1. தியாகராசா
2. கணபதிப்பிள்ளை
3. சந்திரசேகரம்
4. சரஸ்வதி
+
வரதராசா

1. ஞானகணேசன்
2. மனோகரி
3. கலைச்செல்வி

5 சிவபாக்கியம்
+
பரஞ்சோதி

மீனாட்சி
இராஜேஸ்வரி
ரூபன்குமார்

TYPESET AND PRINTED AT PRINT GRAPHICS
NO - 4 NELSON PLACE, COLOMBO - 6 TELE - 596312